# அலைவாய்க்கரையில் புதினத்தில் பரதவர் இனவரைவியல்

## Bharatava Ethnography in the Novel Alaiwaikaraiyil

**முனைவர் த.கீதாஞ்சலி / Dr.T.Geethanjali[1]**

Date of submission: 2024-10-16
Date of acceptance: 2024-11-20
Date of Publication: 2024-12-30
Corresponding author's Name: T. Geethanjali
Email: t.geethanjalingm@gmail.com

**Abstract**

The purpose of this article is to examine the ethnographic elements emerging in the Alaiwaikarai. Analytical approach, descriptive approach, sociological approach, historical approach, ethnographic approach have been followed as the research is carried out on the basis of classifying and analysing the ethnographic elements of Bharatava ethnic people found in Budhinam. This is the first essay on Bharatava people to be ethnographically oriented. Literature is an important document to know the history of the people. All the ancient literature was in the form of Seyul. After the arrival of the westerners, especially after the 18th century, the traditional yapu methods were changed in Tamil literature and literature like short story, novel and drama appeared. Among these, the short story and novel are fictional. Although these can be created in imagination, they are central to people's lives. In that way, by conducting a study with ethnographic elements on the newly created wave bank that reflects the life of the particular race, the geography, time environment, inherited cultural changes and contemporary problems of the Bharatava people can be found and the study results can be shown to the society.

**Keywords:** Modern Literature, Ethnography elements, Ethnic life, People's culture

### இனக்குழு வாழ்வியல்முறை

புதினங்கள் குறிப்பிட்ட வட்டார மக்களின் வாழ்வியல் அல்லது பல்வேறுபட்ட இனத்தைச் சார்ந்த மக்களின் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டு படைக்கப்பட்டு வருகின்றன. அவை படிக்கும் வாசகனின் மனத்தை ஈர்ப்பதுடன் பல்வேறுபட்ட சமூகத்தின் பழக்கவழக்கங்களையும் கலாச்சாரத்தையும் அறிய வழிவகை செய்கின்றன.

'தமிழ்ச்சமூகம் செல்நெறி வழியில் காலந்தோறும் ஒரு இனக்குழுவின் வரலாறு வீழ்த்தப்பட்டிருக்கிறதேயொழிய வரலாற்றுச் சமூகம் ஒன்று இருந்தமைக்கான சான்றுகள் ஏதும் இருந்ததுக்கானச் சான்றுகள் குறிப்பிடப்படவில்லை. இவை தமிழ்நில அசைவியக்கத்தின் மறுக்க முடியாத உண்மை. வீழ்த்தப்பட்ட தொல்குடிகள் தொடர்ந்து, தங்களைத் தகவமைத்துக் கொள்வதற்கான

[1] The author is an Assistant Professor in Tamil, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi-642 001, Tamilnadu, India, t.geethanjalingm@gmail.com

*நெடிய பயணப்படுதலை முன்னெடுத்திருக்கும் இக்காலத்தில் படைப்பாக்கமும் அவசியமாகிறது.'*

*(அடைக்கலராஜ், நவம்பர் 2022)*

என்ற கூற்றின்வழி நெய்தல் நில மக்களலான பரதவ இன மக்களின் வரலாறுகள், வாழ்வியல் முறைகள் இக்கால இலக்கியங்களில் பதியத் தொடங்கியிருக்கிறார்கள். அந்தவகையில் பரதவர் இன மக்களின் வாழ்வியல் பதிவுகளையும் கதை நிகழ்ந்த காலக்கட்டத்தில் அம்மக்களின் பண்பாடு எவ்வாறு இருந்தது என்பதையும் தற்காலத்தில் அவை எவ்வாறு மாற்றத்திற்கு உள்ளாகியிருக்கின்றன என்பதையும் இனவரைவியல் கூறுகளைக்கொண்டு உற்றுநோக்குவதாக இவ்வாய்வு அமைகின்றது.

### ஆய்வுநோக்கம்

ஓர் இனத்தின் வாழ்வியல் குறித்தக் கருத்தாக்கங்களைப் புதினத்தில் பதிவு செய்யும்போது, அதில் அவ்வின மக்களின் வரலாறு, வாழ்க்கைமுறைகள், சடங்குமுறைகள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், தொழில் முறைகள் போன்ற இனவரைவியல் கூறுகள் இடம்பெற்றுள்ளனவா என்பதைக் கண்டறிவதுடன், குறிப்பிட்ட இனத்தின் பாரம்பரியமான பண்பாடுகள் தற்காலத்தில் மாற்றம் அடைந்துள்ளனவா என்பதை ஆராய்வதாகவும் இக்கட்டுரையின் நோக்கம் அமைகிறது.

### ஆய்வு அணுகுமுறைகள்

புதினத்தில் காணப்படும் பரதவர் இனமக்கள் பற்றிய இனவரைவியல் கூறுகளை வகைப்படுத்தித் தரவுகளின் அடிப்படையில் தொகுத்தும் பகுத்தும் ஆய்வு மேற்கொள்ளப்படுவதால் பகுப்பாய்வு அணுகுமுறையும் அவ்வின மக்களின் புவிச்சூழல், நம்பிக்கைகள், சடங்குகள், பற்றி விளக்குமிடங்களில் விளக்கமுறை அணுகுமுறையும் சமூகநிலை குறித்து ஆய்வதால் சமூகவியல் அணுகுமுறையும் அவர்களின் வாழ்விடம், சுற்றுச்சூழல் போன்றவற்றை விளக்கிக்காட்டுமிடத்து வரலாற்றுமுறையும் இனவரைவியல் அணுகுமுறையும் பின்பற்றப்பட்டுள்ளன.

### ஆய்வு முன்னோடிகள்

இனவரைவியல் குறித்த திறனாய்வுகள் தொடக்க காலத்திலிருந்தே நடைபெற்று வருகின்றன. ஆனால், புதினங்களில் இனவரைவியல் கூறுகளைப் பொருத்தி ஆய்வு மேற்கொள்ளுதல் என்பது அருகியே காணப்படுகிறது. எட்கர்தர்ஸ்டன் (கந்தையாபிள்ளை.ந.சி, மொழிபெயர்ப்பு ஆசிரியர்), தென்னிந்திய குலங்களும் குடிகளும் (1999) எனும் புத்தகத்தில் பல்வேறு இனக்குடிகளைச் சார்ந்த மக்களின் வாழ்வினை ஆராய்ந்து ஆய்வுமுடிவுகளை வெளியிட்டுள்ளார். அதேபோல ஆ.சிவசுப்பிரமணியன் அவர்கள் இனவரைவியலும் தமிழ்நாவலும் எனும் புத்தகத்தில் இனவரைவியல் குறித்தச் செய்திகளைப் புதினங்களில் பொருத்தி ஆய்வு மேற்கொண்டு புத்தகமாக வெளியிட்டுள்ளார். (சிவசுப்பிரமணியன், 2009) இந்த இரண்டு புத்தகங்களை முன்மாதிரியாகக் கொண்டு அலைவாய்க்கரையில் புதினத்தில் காணப்படும் இனவரைவியல் கூறுகளைப் பொருத்திப் பார்த்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

### இனவரைவியல்–வரையறை

இனவரைவியல் என்பதற்கு,

> *'எழுத்தாளன் யாரைப் பற்றி எழுதுகிறானோ, அந்த மக்களின் வாழ்க்கை முறையைப் பற்றிய விளக்க உரைகள், விவர அறிக்கைகளை உருவாக்கக் கூடிய விசாரணை மற்றும் எழுத்து வடிவமே இனவரைவியல் ஆகும்.'*
>
> *(Denzin Norman, 1997)*

என மேலை நாட்டறிஞர் விளக்கம் தருகிறார்.

> *'இனவரைவியல் என்பது கள ஆய்வுகளின் அடிப்படையில் மனித சமூக தோற்றப்பாடுகள் தொடர்பான பண்புநிலை விளக்கமாக அமையும் ஒருவகை எழுத்தாக்கம் ஆகும். பண்பாட்டு மானிடவியலின் முக்கிய பிரிவாக இனவரைவியல் அமைந்துள்ளது.*

*ஒரு குறிப்பிட்ட சமூதாயத்தில் வாழும் மக்களின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான வாழ்வியல் கூறுகளை களஆய்வு முறைகளின் மூலம் பெறப்படும் முக்கியமான தரவுகளைக் கொண்டு விளக்கமாக எழுதுவதாகும்.'*

*(Gracy Janova, 2022)*

இனவரைவியலுக்கு, இனக்குழுவியல் எனும் பெயரும் உண்டு என்றும், இனவரைவியல் இனக்குழுவியல் இரண்டும் ஒரே துறைதான் என்பதை வலியுறுத்தும் விதமாக பக்தவத்சலபாரதி,

*'சமுதாயப் பண்பாட்டு மானிடவியலுக்கு அடித்தளமாகத் திகழ்வது இனக்குழுவியலேயாகும். 'இனக்குழுவியல்' என்னும் பொருளுடைய 'ethnography' என்னும் ஆங்கிலச் சொல், 'ethnos', 'graphain' ஆகிய கிரேக்கச் சொற்களின் மூலங்களைப் பெற்றது. 'ethnos' என்பதற்கு இனம் (race) இனக்குழு (ethnic group) மக்கள் people என்பது பொருள். 'graphain' என்பதற்கு 'எழுதுவது' அல்லது 'வரைதல்' (to write) என்பது பொருள். ஆகவே இனவரைவியல் என்பது ஒரு தனிப்பட்ட இனக்குழு அல்லது மக்களைப் பற்றி எழுதுதல் என்னும் பொருளை உணர்த்துகிறது. ஒரு இனக்குழுவைப் பற்றிய முழுமையான படிப்பு என்னும் வகையில் இப்பிரிவை 'இனக்குழுவியல்' என்றும் கூறலாம்.'*

(வினோதா, 2021, ப.117)

எனக் கூறியுள்ளார். கலைக்களஞ்சியமான விக்கிப்பீடியாவும், *'இன வரைவியல் என்பது, கள ஆய்வுகளின் அடிப்படையில், மனித சமூகத்தோற்றப்பாடுகள் தொடர்பான பண்புநிலை விளக்கமாக அமையும் ஒருவகை எழுத்தாக்கம் ஆகும். தனிப்பட்ட இனக்குழு அல்லது மக்களைப் பற்றி எழுதுவது இனவரைவியல் எனலாம். ஒரு முறைமையின் பகுதிகளைத் தனித்தனியாக அணுகுவதன் மூலம் அம்முறைமையை அச்சொட்டாகப் புரிந்து கொள்ள முடியாது என்ற எண்ணக் கருத்தின் அடிப்படையில் உருவான ஒரு முழுதளாவிய ஆய்வுமுறையின் விளைவுகளை இனவரைவியல் முன் வைக்கிறது. இனக்குழு பற்றிய முழுமையான ஆய்வு என்பதனால் இதனை இனக்குழுவியல் என்றும் குறிப்பிடலாம்'* என எடுத்துக் காட்டியுள்ளது. *'குறிப்பிட்ட இனக்குழுவின் பண்பாட்டை விளக்கும் கலை அல்லது அறிவியலை இனவரைவியல் என்று அழைப்பர்'* (அருள்செல்வி, அக்டோபர் 2018, ப.1).

இதன் மூலம் இனவரைவியல் இனக்குழுவியல் என்ற இருசொற்களும் வேறு வேறானவையல்ல என்பது தெளிவாகிறது.

### இனவரைவியல் கூறுகள்

இனவரைவியல் என்பது தனிப்பட்ட மக்கள் கூட்டத்திடமிருந்துப் பெறப்படும் பண்பாட்டுத் தரவுகள் தான் இனவரைவியல் கூறுகள் என்பதற்கேற்ப என்னென்ன கூறுகள் சேகரிக்கப்பட வேண்டும் என்பதை,

*'ஓர் அயற்பண்பாட்டை விளக்க முற்படும் எந்த ஒரு சிறந்த இனவரைவியல் தொகுப்பும் பின்வரும் முதன்மையான கூறுகளைப் பற்றி விளக்குவதாக அமையும். அவை புவிச்சூழலியல் (topography) சுற்றுச்சூழல்(environment) காலநிலை(Climate) குடியிருப்பு முறை(settlement pattern) பொருள்சார் பண்பாடு(material culture) குடும்ப அமைப்பு, திருமண முறை, உறைவிடமுறை(residence pattern) வாழ்வியல் சடங்குகள், குழந்தை வளர்ப்பு முறை, பண்பாட்டு வயமாக்கமுறை(enculturation) மக்களின் உளவியல் பாங்குகள், மணக்கொடை, மணவிலக்குமுறை, வாழ்க்கைப் பொருளாதாரம் (subsistence) தொழிற்பகுப்பு(division of Labour), உற்பத்திமுறை, நுகர்வுமுறை, பங்கீட்டுமுறை, பரிமாற்ற முறை, கைவினைத் தொழில்கள், அரசியல் முறை, அதிகார உறவுகள், சமூகக் கட்டுப்பாடு, மரபுசார் சட்டங்கள்(cutomary laws), சமய நம்பிக்கைகள், சடங்குகள், வழிபாட்டுமுறைகள், மந்திரம், சூனியம், விழாக்கள், இசை, விளையாட்டுகள், அழகியல் சிந்தனைகள், வழக்காறுகள்(Folklore),*

*ஈமச்சடங்குகள், பிற தொடர்புடைய செய்திகள் முதலியன. அவ்வாறு தொகுக்கப்படும் செய்திகள் ஒரு தனிப்பட்ட சமூகத்தைப் பற்றியதாக இருப்பதால் இனவரைவியல் நூல்கள் அனைத்தும் "தனி வரைவுநூல்கள்" (monographs) எனக் கூறப்பெறும்'* (பக்தவத்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல், 2009, பக்.118,119)

*'புவிச்சூழலியல், சுற்றுச்சூழல், காலநிலை, குடியிருப்பு முறை, உறைவிட முறை பொருள்சார் பண்பாடு, குடும்ப அமைப்பு, திருமணமுறை, வாழ்வியல் சடங்குகள், மக்களின் உளவியல் பாங்குகள், குழந்தை வளர்ப்புமுறை, பண்பாட்டு மயமாக்கமுறை, மணக்கொடை, மணவிலக்கு, வாழ்க்கைப் பொருளாதாரம், தொழில் பகுப்புமுறை, உற்பத்திமுறை, நுகர்வுமுறை பங்கீட்டுமுறை, பரிமாற்றமுறை, கைவினைத்தொழில்கள் , அரசியல் முறை, அதிகார உறவுகள், சமூகக் கட்டுப்பாடு, மரபுசார் சட்டங்கள், சமய நம்பிக்கைகள், சடங்குகள், வழிபாட்டு முறைகள், மந்திரம், சூனியம், விழாக்கள், இசை, விளையாட்டுக்கள், விழாக்கூறுகள், ஈமச்சடங்குகள் ஆகியவை பற்றிய செய்திகளே இனவரைவியல் கூறுகளாகும்'* (வினோதா, ஜனவரி 2021). என்று குறிப்பிட்டுள்ளதிலிருந்து குறிப்பிட்ட இனத்தின் பண்பாட்டுக் கலாச்சாரத்தை முழுமையாகத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் குறைந்தபட்சம் மேற்காண் கூறுகளாவது கட்டாயமாகத் திரட்டப்பட்டிருக்க வேண்டும் என்பது புலனாகின்றது.

### புதினங்களில் இனவரைவியல் கூறுகள்

புதின இலக்கியங்கள் பொதுவாகச் சமுதாயத்தில் நிலவும் சீர்கேடுகளை எடுத்துக்காட்டுவனவாக அமைகின்றன என்றாலும், சில புதினங்கள் குறிப்பிட்ட இனத்தைப் பற்றிய செய்திகளுடன், அந்த இனத்தவரின் பண்பாட்டை விளக்கும் வரலாற்றுக் கருவூலமாகவும் திகழ்கின்றன. அவ்வகையில் இனவரைவியல் செய்திகள் எவ்வாறு புதின இலக்கியத்தில் பயன்படுத்தப்படுகின்றன என்பதை,

> *'ஒரு இலக்கியப் படைப்பு சிறந்து விளங்க வேண்டுமானால் அதில் இடம்பெறும் மாந்தர்களும், அம்மாந்தர்களின் பின்புலத்திலுள்ள சகல இயக்கங்களும் உரிய பொருட்களும் மிக நுணுக்கமாகச் சித்திரிக்கப்பட வேண்டும். இதற்கு மிகவும் உறுதுணையாக அமைவது அவ்விலக்கியத்தைப் படைக்கும் படைப்பாளியின் இனவரைவியல் அறிவாகும். இலக்கியத்தில் இடம்பெறும் ஒரு குறிப்பிட்ட சமூகத்தைப் பற்றிய இனவரைவியல் செய்திகள் அவ்விலக்கியத்தில் இடம்பெறும் பாத்திரங்களுக்கும், பிரச்சனைகளுக்கும் பொருத்தமான பின்புலத்தை உருவாக்க உதவுகின்றன.*
>
> (சிவசுப்ரமணியன், 2009, ப.12)

என்ற சான்றின்வழி ஓர் இனத்தின் பண்பாட்டை அறிந்து கொள்ள உதவும் இனவரைவியல் செய்திகள் பெரும்பாலும் புதினத்தின் பின்னணியாகவோ பாத்திரங்களின் மூலமாகவோ வெளிப்படும் என்பது புலனாகிறது.

### அலைவாய்க்கரையில் புதினத்தில் இனவரைவியல் கூறுகள்

1978ஆம் ஆண்டில் எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணனால் கன்னியாகுமரி மாவட்டத்தின் கடற்கரைப் பகுதிகளில் மீன்பிடித்தல் தொழில் செய்யும் பரதவர் இனமக்களின் வாழ்வியலை எடுத்துக் காட்டும் விதமாக இப்புதினம் வெளிவந்தது. கன்னியாகுமரியை அடுத்துள்ள திருச்செந்தூர், மணப்பாடு, இடிந்தகரை போன்ற கடற்கரைப் பகுதிகளில் வாழும் பரதவர்கள் கடலில் சென்று பிடிக்கும் மீன்களின் துவிகளைத் தேவாலயங்களுக்கு வரியாகக் கொடுத்து வந்தனர். அந்நிலையில் மீனின் துவிகளை ஏற்றுமதி செய்வதன் மூலம், அதிக விலை பெற்றதால், அதனைக் கோவிலுக்குக் கொடுக்க மறுத்துப் போராட்டம் நடத்தினர். சுருக்கமாக, மதத்தின் பெயரால் பரதவர்களின் உழைப்பானது சுரண்டப்படுவதை எதிர்த்து, அம்மக்கள் போராடும் நிகழ்வை ராஜம் கிருஷ்ணன் இப்புதினத்தின் மையப்பொருளாக அமைத்துள்ளார். மேலும் இனம் சார்ந்த

செய்திகளையும், பண்பாட்டையும் பதிவு செய்துள்ளார்.

### வாழ்நிலைக்கூறுகள்

பூமியில் தோன்றிய ஒவ்வொரு உயிரினமும் இடச்சூழலுக்கும், காலச்சூழலுக்கும் ஏற்பத் தத்தம் வாழ்வினை அமைத்துக் கொள்கின்றன. மனிதனும் அவ்வியற்கை நியதிக்குள் கட்டுண்டு வாழ்கிறான். அவன் தேர்நதெடுக்கும் வாழ்க்கைச் சூழலுக்கு ஏற்ப அவனுடைய பண்பாடும் அமையும் என்பது சமூகவியலாளர் கருத்தாகும். இதனடிப்படையில் பரதவர் இனத்தவரின் வாழ்நிலைக் கூறுகள் ஆராயப்படவுள்ளன.

### புவிச்சூழல்

நிலத்தைப் பின்புலமாகக் கொண்டு இலக்கியம் படைக்கப்படும் மரபு பண்டைக்காலம் தொட்டு இன்றைய இலக்கியங்கள் வரை தொடர்கின்றன. நாவலைப் பொறுத்தவரை பின்னணி என்ற சொல் பூகோள ரீதியான பின்னணியை அதாவது கதை நிகழும் நாடு, இடம் முதலியவற்றையும் சமுதாய சூழலையும் குறிக்கும் (1997, ப.119) என்று இரா. தண்டாயுதம் குறிப்பிட்டுள்ளார். புவிச்சூழல் என்பது புதினத்தின் கதைக்களமாக அமைந்திருக்கும் மாவட்டம் அல்லது வட்டாரப் பகுதிகளின் புவியியல் பதிவுகளைக் குறிப்பதாக அமைகிறது. 'கடலின் இடையறாத இலய இசைக்கு ஏற்ப பனைகள் சுருதி கூட்டும் கன்னிபுரக் கடற்கரையில்...' (அலைவாய்க் கரையில், ப.63) எனக் கடற்கரைச் சூழ்நிலையை ராஜம் கிருஷ்ணன் காட்சிப்படுத்தியுள்ளார்.

### குடியிருப்புமுறை

வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களைத்தேடி நாடோடிகளாக அலைந்த மனிதன் காலப்போக்கில் நிலையாக ஓரிடத்தில் குடியேரத் தெடங்கினான். அந்த இடத்தினுடைய வசதி வாய்ப்புகளுக்கேற்ப அவனுடைய வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டான்.

'மனிதனாகப் பிறந்த அனைவருக்குமே அவர்களின் வசதிகளுக்கேற்ப குடியிருக்க ஓர் இடம் அவசியத் தேவையாக உள்ளது என்பதை யாராலும் மறுக்க முடியாது.' (பவித்ரா, 2013, ப.7)

என்ற சான்றால் தெரிந்து கொள்ள முடிகிறது. கடற்கரைப் பகுதியில் வாழும் பரதவ மக்களின் குடியிருப்புப் பகுதியை,

'சில வீடுகள் வெறும் கீற்றுக் குடிசைகள், முன்னும் பின்னும் ஒழுங்கில்லாத வரிசைகள்...'

(இராஜம் கிருஷ்ணன், 1978, ப.15)

என்று வாழ்விட அமைப்பை ராஜம் கிருஷ்ணன் எடுத்துக் காட்டியுள்ளார்.

### உணவு

எத்தகுநிலையில் வாழ்வோராயினும் உணவு என்பது இன்றியமையாதனவாகும். மனிதனின் அடிப்படைத் தேவைகளில் முதலாவதாக அமைவது உணவு, பின்பு உடையும், இருப்பிடமும் இடம்பெறுவதைக் கொண்டு உணவின் முக்கியத்துவம் புலனாகிறது.

> 'ஒரு குறிப்பிட்ட மக்கள் சமூகத்தின் அசைவியக்கங்களை உணர அவர்தம் உணவுப் பழக்கவழக்கங்களைக் கூர்ந்து நோக்க வேண்டும். உணவுப் பழக்க வழக்கங்கள் ஒரு சமூகம் வாழும் பருவச் சூழ்நிலை, வாழ்நிலத்தின் விளைபொருள்கள், சமூகப் படிநிலைகள், உற்பத்தி முறை, பொருளாதார நிலை ஆகியவற்றைப் பொருத்து அமையும்.'

(பரமசிவன், 2016, ப.23)

என்ற கூற்றும் சான்று பகர்கிறது. கடற்கரைப் பகுதியில் வாழும் பரதவர்களின் உணவுமுறையினை,

> 'வெள்ளாட்டு இறைச்சி வாங்கி வந்து ஆணம் வைக்கிறாள். பப்படம் பொரிக்கிறாள். பண்டியல் சாப்பாடு போல் உண்டு மகிழ்கின்றனர்.'

(இராஜம் கிருஷ்ணன், 1978, ப.126)

என்று பதிவு செய்யப்பட்டுள்ளதன் மூலம் பரதவ மக்கள் தான் வாழும் பகுதிகளில் எளிதாகக் கிடைக்கும் உணவுப் பொருள்களை மக்கள் உண்டு வாழ்கின்றனர் என்பது புலனாகிறது.

**தொழில்கள்**

மனிதனின் தேவைகளை நிறைவு செய்துகொள்ள பொருள் வேண்டும். பொருளைப் பெற அடிப்படையாக அமைவன தொழில்கள் எனலாம். ஒவ்வொரு மனிதனும் ஏதேனும் ஒரு தொழிலைச் செய்வதன் மூலம் பொருளை ஈட்டுகின்றான். கடலுக்குச் சென்று மீன்பிடித் தொழில் செய்யும் மீனவ மக்களின் வாழ்க்கைப் போராட்டங்களைப் பற்றி இராமஜெயம்,

> *'வாழ்க்கை முழுமையுமே போராட்டம் என்பது மீனவ இனத்துக்கு மட்டுமே பொருந்தும். மற்ற எந்த இனத்துக்கும் இத்தகைய போராட்டமே வாழ்க்கை என்ற நிலை இல்லை. அவ்வாறு இருக்கவும் வாய்ப்பில்லை. கட்டுமரத்துடன் போராட்டம் (மற்ற எந்த வகை மீன் கலனாக இருந்தாலும் கூட போராட்டம்தான்), வலையுடன் போராட்டம், காற்றுடன் போராட்டம், கடல் நீரோட்டத்துடன் போராட்டம், வெய்யிலுடன் போராட்டம், மழையுடன் போராட்டம், புயலுடன் போராட்டம், மீன்களுடன் போராட்டம், இத்தனை போராட்டங்களையும் கடந்து கரைக்குத் திரும்புவதுதான் மீனவர்கள் வாழ்க்கை.'*
>
> (இராமஜெயம், 2002, ப.45)

என்று குறிப்பிட்டிருப்பதன் மூலம் மீன்பிடிக்கும் தொழில் செய்யும் பரதவர்களின் வாழ்க்கைச் சிக்கலை அறிந்து கொள்ள முடிகிறது. கடலில் மட்டும்தான் போராட்டம் என்றில்லை. கரைக்கு வந்ததுமே மதத்தின் பெயரால் சுரண்டப்படுவதை,

> *'கிறிஸ்தவம் மாதாண்ணும் யேசுவேன்னும் செல்லுதோம். இத்துண்ணா முருகாண்ணுவா? அதுக்காவ துவி, கோயிலுக்குச் சொந்தமிண்ணு சொல்றது நாயமா?.'*
>
> (இராஜம் கிருஷ்ணன், 1978, ப.75)

என்று தொழிலால் பரதவர் எதிர்கொள்ளும் சிக்கல்கள் குறித்துப் பதிவு செய்துள்ளார்.

**மொழி**

ஓர் இனத்தைக் கண்டறியவும், அதன் வரலாற்றை அறியவும் இன்றியமையாத கருவியாக மொழி அமைகின்றது. தான் சார்ந்த நிலப்பகுதியைப் பிரதிபலிப்பது மொழி எனலாம். மொழி குறித்து,

> *'ஒரு நாட்டு மக்களின் நாகரிக நிலையைக் காட்டுவது அவரவர் தாய்மொழியே. எந்நாட்டிலும் மொழி பொதுமக்களின் அமைப்பென்றும் அறிதல் வேண்டும்.'*
>
> (தேவநேயப் பாவணார், 1966, ப.19)

என்று குறிப்பிட்டுள்ளார்.

> *'மக்கள் தங்களை அடையாளப்படுத்திக் கொள்வதில் மொழியும் முதலிடம் பெறுகிறது. தாங்கள் சார்ந்து வாழும் வட்டாரம் தங்கள் பண்பாட்டின் தனித்த கூறுகள், வழிபாட்டு முறை, வழக்காறுகள், கலைகள் என பல கூறுகள் தனித்த அடையாளங்களாக இருப்பினும் மொழிவழி அடையாளமே முக்கிய அடையாளமாக அமைகிறது'*
>
> (ஆன்றிஷா, சனவரி 2023)

பரதவ மக்கள் பேசும் தமிழ்மொழியில் மொழிச்சிதைவு காணப்படுவதை,

> *'லே என்னியலே நாஸ்திகம் பேசுதே? நாக்கழுவிப் போசுரும்லே! ஊரில, கடக்கரயில, கோயிலை எதிர்த்து இல்லாத நாயம் கோண்டு வாரானுவ, நாய்க்கிப் பொறந்த பயலுவ...'*
>
> (இராஜம் கிருஷ்ணன், 1978, ப.79)

என்ற வரிகள் உணர்த்துகின்றன.

**திருமணமுறை**

குடும்பம் என்ற கோப்பை ஏற்படுத்துவதற்கு மூலகாரணமாக விளங்குவது திருமணம் எனலாம். மனித இனம் தன் பால் உந்துதலை ஒரு நிறுவன அமைப்பிற்குள் நிறைவு செய்துகொள்ள ஏற்படுத்திக்கொண்ட முறையை திருமணம் என்பர். இதனை,

> *'திருமணம் என்பது ஓர் ஆடவனும், ஒரு பெண்ணும் இணைந்து வாழ்வதற்கு*

*சமுதாயத்தால் ஏற்படுத்தப்பட்ட வினைமுறையாகும். இவ்வினை காரணமாக மனிதன் சில மதிப்புகளையும் பொறுப்புகளையும் ஏற்க வேண்டியுள்ளது.'*

(வாழ்வியற் களஞ்சியம், தொகுதி.2, ப.430)

என்று வரையறுக்கப்பட்டுள்ள திருமணம் பல விதிகளின் படியே நடைபெறுகின்றன.

அலைவாய்க்கரையில் புதினத்தில் பெற்றோர் பார்த்து மணமுடித்தல், உடன்போக்கு, மசவாதி கெட்டு முதலிய மணமுறைகளைக் காணமுடிகின்றது. உடன்போக்கு என்பது பெற்றோர் சம்மதம் இல்லாமல் செய்துகொள்ளும் திருமணம் ஆகும். மசவாதி கெட்டுமுறை என்பது முறை மீறிய திருமணம். அதாவது ஏற்கனவே திருமணமாகிக் கணவன் இறந்தபின் பரத்தையாக வாழும் ஏலி என்ற பெண்ணிடம் மரியான்,

*'நானும் பாவஞ் செய்தேண்ணு எம்மேல கோவிச்சுக்கிறியா ஏலி?... நீ கவலிக்காத, நிச்சயமா நாம கெட்டிக்கத்தாம் பொறம். ஒரு விடியக் காலயில, மஸனாவிக் கெட்டா, நா ஓனக்குத் தாலி கெட்டுவே...'*

(இராஜம் கிருஷ்ணன், 1978, ப.173)

என்று கூறுவதிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது.

### பரதவர் பழக்கவழக்கங்கள்

மனிதன் எப்போது கூட்டமாக வாழ்வதென முடிவெடுத்து வாழத்தொடங்கினானோ அன்றே இனக்குழு வாழ்க்கை ஆரம்பமாயிற்று. இனக்குழுக்கள் தங்களுக்கென தனிப்பட்ட வாழ்கை முறையை வகுத்து வாழக் கற்றுக்கொண்டன. இவ்விதமாக வாழ்வில் ஓர் இனக்குழுவில் கடைபிடிக்கப்பட்ட வாழ்க்கை நெறிகள் மற்றக்குழு முறையை ஈர்க்கும் பொழுது அவர் மேற்கொண்ட செயல்கள் வழக்கமாகவும், தொடர்ந்து செய்ததன் காரணமாக அப்பழக்கங்களே காலப்போக்கில் வழக்கமாகவும் மாறின எனலாம். தமிழர் பண்பாடும் பயன்பாடும் என்ற நூலில்,

*'சூழ்நிலைக்கு ஏற்ப தனிமனிதனிடம் வேர்விடுகின்ற செயல்பாடுகளே பழக்கம் எனப்படும். பழக்கம் என்பதற்கு இணையான ஆங்கிலச் சொல் Habit. பல தனிமனிதர்களின் பழக்கங்கள் ஒரு குழுவின், இனத்தின் சமுதாயத்தின் தொடர் பழக்கங்களாக வளர்ந்து மரமாக முற்படும் பொழுது அது வழக்கம் என்ற நிலைக்கு உயர்கிறது. இதனை ஆங்கிலத்தில் Costom என்பர்.'*

(பாக்யமேரி, 2006, ப.95)

எனக் குறிப்பிட்டுள்ளதன் வழி தனிமனிதனிடம் தோன்றுகின்ற பண்புகளில் ஒன்று பழக்கம் எனவும், அப்பழக்கத்தை வளர்தெடுத்து நிலைபெறச் செய்தல் வழக்கம் எனவும் தெளிவாகிறது. சமுதாயத்தில் ஒவ்வொரு சமூகத்தினரும் தனித்தனியான குணநலன்களைக் கொண்டு விளக்குகின்றனர். அவ்வகையில் கடற்கரைப் பகுதியில் வாழும் பரதவ மக்கள் மிகுந்த கோபத்துடனும், முரட்டு குணத்துடனும் இருப்பர். எனினும் அவர்களிடம் பிறரை ஏய்துப் பிழைக்கும் வழக்கம் இல்லையென்பதை,

*'கடற்கரையில் அவ்வாறு கூட்டுத்தொழில் செய்பவர்கள் ஒருவரை ஒருவர் ஏமாற்றிக் கொள்ள மாட்டார்கள். கொடுக்க மாட்டேன் என்று கள்ளுக்குக் காசு எடுத்துக் கொண்டாலும், அதற்காக அழுத்துக் கொண்டாலும், தெரியாமல் மோசம் செய்யும் வழக்கம் அவர்களில் இல்லை.'*

(இராஜம் கிருஷ்ணன், 1978, ப.38)

என இராஜம் கிருஷ்ணன் சுட்டியுள்ளார். அதன்மூலம் பரதவர் பண்புநலன்களை அறியமுடிகின்றது. அதே சமயம் இம்மக்களிடம் கட்டுப்பாடான வாழ்க்கை முறையைக் காணமுடியாது. திருமணத்திற்கு முன்னும், பின்னும் ஆண் பெண்ணையும், பெண் ஆணையும் தேடிச் செல்லும் பழக்கத்தை வழக்கமாகக் கொண்டுள்ளதை,

*'இந்த கடற்கரையில் எச்சியாகாத பரவன்-அல்லது பரவத்தி இருப்பார்களோ என்று மனசுக்குள் கேட்டுக் கொள்கிறான்.'*

(இராஜம் கிருஷ்ணன், 1978, ப.38)

*எனக் கதாமாந்தர்களின் கூற்றாகவே காட்சிப்படுத்துகிறார்.*

### தெய்வ வழிபாடு

பரதவர்கள் கிறித்தவர்களாக இருப்பதால் இயேசுபிரானை வழிபடுகின்றனர். தமிழகத்தின் தென் பகுதியில் வாழும் பரதவர்களில் எண்பது சதவீதத்தினருக்கும் மேலானோர் கிறத்தவ மதம் சார்ந்தவர்களாக உள்ளனர். ஆனால் ஏறக்குறைய நானூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்துதான் பரதவ இன மக்கள் அனைவரும் இந்து மதத்தைப் பின்பற்றுபவர்களாக இருந்துள்ளதைப் பல்வேறு இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. ஆங்கிலேயர்களின் வருகைக்குப் பின்னரே காலச்சூழலாலும், பல்வேறு அரசியல் காரணங்களாலும் ஒட்டுமொத்த பரதவ இனமும் கிறத்தவ மதத்திற்கு மாறியுள்ளன. இது குறித்து இராஜம் கிருஷ்ணன்,

> *'பதினாறாம் நுற்றாண்டின் தொடக்கமாகிய அக்காலத்தில், பாண்டிய நாட்டின் தென்பகுதி முகமதியர் படையெடுப்பின் காரணமாக ஆட்டங்கண்டு சிறு சிறு குறுநில மன்னர்களின் ஆட்சியில் பிளவுபட்டுக் கிடந்தது. கடல் ஆதிக்கம் குறித்து தமிழ்நாட்டு வாணிபத்திலும் அரசியலிலும் செல்வாக்குப் பெற்று வந்த முகமதியர்களுக்கும் பாண்டியப் பேரரசு வீழ்ந்த பின் தம் செல்வாக்கை இழந்த பரதவருக்கும் இடையே வேறுபாடுகளும் பகைமையும் தோன்றின. இந்நிலை முற்றி, பூசல்களும் தகராறுகளும் வன்முறையில் கொண்டு வந்து விட்டன. போர்த்துக்கீசியரிடம் பரதவர் உதவி கோரும் சந்தர்ப்பமும் வாய்த்தது. கிறித்தவ சமயத்தைப் பரப்ப வந்திருந்த போர்த்துக்கீசியர் இவ்வாய்ப்பைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர். மெல்ல மெல்ல கோவாப் பிரதேசத்துடன், தெற்கேக் கிழக்குக் கடலோரப் பகுதிகளில் வாழ்ந்த பரதவ மக்கள் அனைவரையும் கிறித்தவ மறை தழுவச் செய்தனர். இவ்வாறு சமயம் மாறியவர் பெயரளவில் கத்தோலிக்கராக இருந்தாலும் நடைமுறையில் இந்துக்களாகவே இருந்திருக்கின்றனர். கி.பி.1542 ஆம் ஆண்டு புனித சவரியார், யேசு சபைக் குருவாக, பரதகுல மக்களிடையே பணியாற்றி வந்த பின்னரே இவர்கள் முறையாகக் கிறித்தவ சமயத்தனராக வாழத் தலைப்பட்டனர்.' (1978, ப.4)*

எனக் குறிப்பிடுகிறார். மதமாற்றம் செய்யப்பெற்ற பரதவர்களின் நிலையை,

> *'இன்றும் கடற்கரையைச் சார்ந்த பரதவர்கள் கிராமங்களில், கோயில்களில் தேர்- திருவிழாக்கள் போன்ற பண்டிகைகள், மணச்சடங்குகளில் இடம் பெற்றிருக்கும் சில பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை உற்று நோக்கினால், இந்தியப் பண்பின் வேர் நிலைத்திருக்க, சமயம் மட்டுமே மாற்றம் பெற்றிருப்பதை உணரலாம். கோயிலில் நேர்த்திகடன் கொடுப்பதிலிருந்து மொட்டையடித்துக் காது குத்துவது வரையிலும், கிறிஸ்தவ சமயம் இந்தியம் தழுவி இருப்பது கண்டு வியப்புத் தோன்றுகிறது.'*
>
> *(ஜோசப் அந்தோணி ஜாண், 2003, ப.5)*

என்று விளக்கியுள்ளார். மொட்டையடித்தல், காதுகுத்துதல், நேர்த்திக்கடன், திருவிழா போன்ற பழக்கவழக்கங்களிலும், நம்பிக்கைகளிலும் எவ்வித மாற்றமும் பரதவர்களிடம் உண்டாகவில்லை என்பதையும் ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

### முடிவுரை

மனிதனுடைய பண்பாடானது அடிப்படையில் நிலவியல் சார்ந்தது. நிலத்தில் ஏற்படுகின்ற அவனுடைய வாழ்வியல் சார்ந்த பழக்கவழக்கங்களே காலப்போக்கில் பண்பாடாகப் பரிணமிக்கின்றன. நீண்டதொரு வரலாற்றுப் பின்னணியுடைய மக்கள் வாழ்வில், காலத்திற்கேற்பப் பண்பாடானது மாறி வருகிறது என்பதை இனவரைவியல் கூறுகளை ஆராய்வதன் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் பரதவர் வாழ்வானது போராட்டம் நிறைந்ததாகவும், பல்வேறு சுரண்டல்களுக்கு ஆட்பட்டதாகவும் அமைந்துள்ளது. இதற்கு அவர்களின் வாழிடச்சூழல், ஒற்றுமையின்மை

கல்வி வளர்ச்சியின்மை, மதத்தின் பெயரால் சுரண்டப்படுதல் போன்றவை காரணமாகின்றன. பரதவர்கள் கிறித்தவ மதத்திற்கு மதம் மாறினாலும், அவர்களின் முன்னோர்களால் கடைபிடிக்கப்பட்ட பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் போன்றவற்றில் பெரும்பாலும் மாற்றங்கள் ஏற்படாமல் இன்றுவரை தொடர்ந்து பின்பற்றி வருகின்றன என்பதை இனவரைவியல் கூறுகளின் வழி அறியமுடிகின்றன.

**References**


Aantisha, M. (2023). Paliyar Ethnography in the Works of Ko. Ma. Gothandam. *Journal of Tamil Language and Literary Studies, 5*(2).

Adaikalaraj, A. Jo. D. (2022). Kurus Padaippukalil Neithal Nilathin Sirappukal. *ValanAayam, 1*(1).

Āṉṟiṣā, Ma. Ko. (٢٠٢٣). Mā.Kōtaṇṭam Paṭaippukaḷil Paḷiyar Iṉavaraiviyal. *5*(2). [ஆன்றிஷா, ம. கொ. (2023). மா.கோதண்டம் படைப்புகளில் பளியர் இனவரைவியல். 5(2).]

Aruḷcelvi, Ca. (2018). Kītāri Putiṉattil Iṭaiyarkaḷiṉ Iṉavaraiviyal Pativukaḷ. Cāṉlāks Paṉṉāṭṭut Tamiḻiyal Āyvitaḻ, 2(2). [அருள்செல்வி, ச. (2018). கீதாரி புதினத்தில் இடையர்களின் இனவரைவியல் பதிவுகள். சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், 2(2).]

Arulselvi, S. (2018). Keethari Puthinathil Idaiyarkalin Inavaraiviyal Pathivukal. *International Journal of Tamil Research, 2*(2).

Aṭaikkalarāj, Ā. Jō. Ṭi. (2022). Kurus Paṭaippukaḷil Neytal Nilattiṉ Ciṟappukaḷ. *Vaḷaṉāyam*, *1*(1). [அடைக்கலராஜ், ஆ. ஜோ. டி. (2022). குருஸ் படைப்புகளில் நெய்தல் நிலத்தின் சிறப்புகள். வளன்ஆயம், 1(1).]

Bhakiyamerry, F. (2006). *Thamizhar Panpadum Payanpadum*. Chennai: Anjanasimizh Pathippakam.

Bhakthavatchala Bharathi. (1966). *Panpattu Manudaviyal*. Chidambaram: Meiyyappan Pathippakam.

Civacuppiramaṇiyaṉ, Ā. (2009). *Iṉavaraiviyalum tamiḻ nāvalum*. Parical veḷiyīṭu. [சிவசுப்பிரமணியன், ஆ. (2009). இனவரைவியலும் தமிழ் நாவலும். பரிசல் வெளியீடு.]

Denzin & Norman, K. (1997). *Interpretive Ethnography, Ethnographic practices for the 21st century*. New Delhi: Sage Publications.

Dhandayutham, Ra. (1997). *Novel Valam* (2nd ed.). New Delhi: Tamil Puthakalayam.

Gracy Janova A. (2023). Ethnography from Purananuru's Perspective. *International Research Journal of Tamil, 4*(26).

Irāmajeyam, Mā. (٢٠٠٢). *Mīṉavar varalāṟum vāḻkkaiyum*. Maṇimoḻi patippakam: Putuccēri. [இராமஜெயம், மா. (2002). மீனவர் வரலாறும் வாழ்க்கையும். புதுச்சேரி: மணிமொழி பதிப்பகம்.]

Jōcap Antōṇi Jāṇ. (2003). Teṉ Tamiḻakattil Kattōlikkam. Tirunelvēli: Celvi Patippakam. [ஜோசப் அந்தோணி ஜாண். (2003). தென் தமிழகத்தில் கத்தோலிக்கம். திருநெல்வேலி: செல்வி பதிப்பகம்.]

Joshep Antony John. (2003). *Then Thamizhakathil Katholikkam*. Thirunelveli: Selvi Pathippakam.

Kirēci Jāṉōvā, A. (2022). Puṟanāṉūṟṟiṉ Pārvaiyil Iṉavaraiviyal. *Tamiḻ Carvatēca Ārāycci Itaḻ, 4*(S-26). [கிரேசி ஜானோவா, அ. (2022). புறநானூற்றின் பார்வையில் இனவரைவியல். தமிழ் சர்வதேச ஆராய்ச்சி இதழ், 4(S-26).]

Paktavatcala Pārati. (2009). *Paṇpāṭṭu Māṉiṭaviyal*. Citamparam: Meyyappaṉ Patippakam. [பக்தவத்சல பாரதி. (2009). பண்பாட்டு மானிடவியல். சிதம்பரம்: மெய்யப்பன் பதிப்பகம்.]

Pākyamēri, Eḥp. (2006). *Tamiḻar Paṇpāṭum Payaṉpāṭum*. Ceṉṉai: Añcaṉaccimiḻp Patippakam. [பாக்யமேரி,

எஃப். (2006). தமிழர் பண்பாடும் பயன்பாடும். சென்னை: அஞ்சனச்சிமிழ்ப் பதிப்பகம்.]

Paramacivan̲, To. (2010). *Ariyappaṭāta Tamil̲akam*. Nākarkōyil: Kālaccuvaṭu Patippakam. [பரமசிவன், தொ. (2010). அரியப்படாத தமிழகம். நாகர்கோயில்: காலச்சுவடு பதிப்பகம்.]

Paramasivam, T. (2013). *Ariyapadatha Thamizhakam*. Nagarkoil: Kalachuvadu Pathippakam.

Pavithra, V.R. (2013). *Pulaiyar Vazhviyal Sadangumuraikal*. Chennai: Kavya Veliyidu.

Pavitrā, Vi. Rā. (2013). *Pulaiyarin̲ Vāl̲viyal Caṭaṅkumur̲aikaḷ*. Cen̲n̲ai: Kāvyā Veḷiyīṭu. [பவித்ரா, வி. ரா. (2013). புலையரின் வாழ்வியல் சடங்குமுறைகள். சென்னை: காவ்யா வெளியீடு.]

Rājamkiruṣṇan̲. (1978). Alaivāykkaraiyil…. Cen̲n̲ai: Tākam Patippakam. [ராஜம்கிருஷ்ணன். (1978). அலைவாய்க்கரையில்…. சென்னை: தாகம் பதிப்பகம்.]

Rajamkrishnan. (1978). *Alaivaikaraiyil*. Chennai: Thagam Pathippakam.

Ramajayam, M. (2002). *Meenavar Varalarum Vazhkkaium*. Puducherry: Manimozhi Pathippakam.

Sivasubramaniyan, A. (2009). *Inavaraiviyalum Tamil Navalum*. Chennai: Parisal Viyeedu.

Taṇṭāyutam. Irā. (1997). *Nāval vaḷam*. Cen̲n̲ai: Tamil̲ puttakālayam. [தண்டாயுதம். இரா. (1997). நாவல் வளம். சென்னை: தமிழ் புத்தகாலயம்.]

Ṭen̲cin̲. Nārman̲, Kē. (1997). In̲ṭarpiriṭiv Etn̲ōkirāpi. Cēj Papḷikēsan̲. [டென்சின். நார்மன், கே. (1997). இன்டர்பிரிடிவ் எத்னோகிராபி. சேஜ் பப்ளிகேஸன்.]

Tēvanēyap Pāvaṇār, Ñā. (1966). *Paṇṭait tamil̲ nākarikamum paṇpāṭum*. Cen̲n̲ai: Kīl̲aiyiyal Āyvu, Tamil̲ Maṇ Patippakam. [தேவநேயப் பாவணார், ஞா. (1966). பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும். சென்னை: கீழையியல் ஆய்வு, தமிழ் மண் பதிப்பகம்.]

Thevaneya Pavanar, Gna. (1966). *Pandai Thamizh Nagarikamum Thamizh Panpadum: Keelaiyiyal Aaivu*. Chennai: Thamizh Man Pathippakam.

*Vāl̲viyal Kaḷañciyam: Tokuti 2*. Tañcāvūr: Tamil̲ppalkalaik Kal̲akam. [வாழ்வியல் களஞ்சியம்: தொகுதி 2. தஞ்சாவூர்: தமிழ்ப்பல்கலைக் கழகம்.]

*Vazhviyal Kalanjium* (2nd ed.). Thanjavur: Tamil University.

Vin̲ōtā, Cu. (2021). Paṇpāṭṭu Mān̲iṭaviyal Pārvaiyil Pon̲n̲īlan̲ Paṭaippukaḷ. Āyvuccuṭar Paṇṇāṭṭu Pan̲mukat Tamil̲ Min̲ Āyvital̲, *4*(1). [வினோதா, சு. (2021). பண்பாட்டு மானிடவியல் பார்வையில் பொன்னீலன் படைப்புகள். ஆய்வுச்சுடர் பன்னாட்டு பன்முகத் தமிழ் மின் ஆய்விதழ், 4(1).]

Vinotha, S. (2021). Panpattu Manidaviyal Parvaiyil Ponneelan Padaippukal. *Aaivusudar Pannattu Panmu Thamizh Ejournal*.